"மின் அஞ்சல் மூலமாக"

**பள்ளிக் கல்வி இயக்ககம்**

| **அனுப்புநர்** | **பெறுநர்,** |
|---|---|
| முனைவர்.ச.கண்ணப்பன், | முதன்மைக் கல்வி அலுவலர்கள், |
| பள்ளிக் கல்வி இயக்குநர், | அனைத்து மாவட்டங்கள் |
| பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், | |
| கல்லூரி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-6 | |

---

ந.க.எண். 055259/ஐ/இ1/2024, நாள்.03.01.2025

பொருள் : தேசிய ஆசிரியர் நல நிதியம் - கல்வி உதவித் தொகை - தமிழ்நாடு தொழில் நுட்ப பயிலக பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு பயிலும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு 2024-2025 கல்வியாண்டிற்கு படிப்புதவித் தொகை வழங்குதல் - விண்ணப்பங்கள் கோருதல் - தொடர்பாக

பார்வை : அரசாணை (நிலை) எண் 169 பள்ளிக் கல்வி (பக5(2)த் துறை நாள் 03.10.2023

---

பார்வையில் கண்ட அரசாணையில், அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் / ஓய்வு பெற்ற / பணியில் இருக்கும் போது இறந்த ஆசிரியர்களின் குழந்தைகள் மற்றும் தொழிற்கல்வி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு (ஒரு ஆசிரியருக்கு ஒரு குழந்தைக்கு மட்டும்) இணைப்பு - I இல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில், உயர் கல்வி பயில்வதற்கு கல்வி கட்டணத் தொகை (Tutition fees) தொழிற்கல்வி பட்டப்படிப்பு பயில கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் உயர்கல்வி கட்டணத் தொகை (Tution Fees) அல்லது ரூ.50,000/- இதில் எது குறைவோ, அத்தொகை மற்றும் தொழிற்கல்வி பட்டப்படிப்பு பயில கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் கல்வி கட்டணத் தொகை (Tution Fee) அல்லது 15,000/- இதில் எது குறைவோ அத்தொகை தேசிய ஆசிரியர் நல நிதியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து உயர்கல்விக் கட்டணத் தொகையை வழங்கப்பட வேண்டும் என ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து, தொழில் நுட்பக் கல்வி, பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பயிலும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு 2024-2025 ஆம் கல்வி ஆண்டிற்கு படிப்புதவித் தொகை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ள பார்வையில் கண்ட **அரசாணை நகல் மற்றும் படிவம் (திருத்திய)** இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

... 2 ...

Padasalai.Net

இத்தகவலை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து ஆய்வு அலுவலர்களுக்கும் அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் உடனடியாக அனுப்பி, சுற்றறிக்கை மூலம் ஆசிரியர் / ஆசிரியைகளுக்கு தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இப்படிப்புதவித் தொகை பெறும் விவரம் தெரியவில்லை என்று தெரிவிக்காத வண்ணம், எந்த விதமான புகாரும் எழாத வகையில் விழிப்புடன் செயல்படுமாறு மீண்டும் அறிவுறுத்தப்படுகின்றனர். மேலும் இத்தொழிற்கல்வி படிப்புதவித் தொகை குறித்து அலுவலக தகவல் பலகையில் விரிவான விளம்பரம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், படிப்புதவித் தொகை பெற விரும்பும் ஆசிரியர்களிடமிருந்து முழுமையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்களை பெற்று தொகுத்து இவ்வியக்ககத்திற்கு 24.01.2025–க்குள் அனுப்பி வைக்கும்படி அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று அனுப்பும் போது கீழ்கண்ட குறிப்புகளை கவனத்தில் கொண்டு விவரங்களை சரிபார்த்து சான்றொப்பமிட்டு அனுப்பிவைக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

Padasalai.Net

1. விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் (மகன்/மகள்) அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் / ஓய்வு பெற்ற / பணியிலிருந்து இறந்த ஆசிரியரின் ஒரு குழந்தைக்கு ஒரு முறை மட்டும் கல்வி கட்டணத் தொகை வழங்கப்படும்.
2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள நிறுவனத்தில் தொழிற்கல்வி பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு (MBBS, BDS, B.VSc, BE, B.Sc (Agri), B.Sc (Nursing), Bachelor of Law and Three years Diploma Course) பயிலும் மாணவர்களுக்கு கல்வி கட்டணத் தொகை வழங்கப்படும்.
3. மனுவில் உள்ள அனைத்து கலங்களும் முழுமையான அளவில் சரியாக தமிழில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். சரியாக பூர்த்தி செய்யப்படாத மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (பணிபுரியும் பள்ளி, முகவரி பின் கோடுடன் இருத்தல் வேண்டும்)

4. பெற்றோர்களின் ஆண்டு மொத்த வருமானம் ரூ.7,20,000/– மிகாமல் இருத்தல் வேண்டும்.
5. தொழிற்கல்வி படிப்பில் கடைசியாக தேர்வெழுதிய மதிப்பெண் சான்றிதழ் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. தந்தை அல்லது தாய் பணியின் விவரம் மற்றும் அவர்களின் ஊதிய சான்று விபரங்களை கண்டிப்பாக விண்ணப்பத்தில் உள்ள கலத்தில் பூர்த்தி செய்திருக்க வேண்டும்
7. தந்தை அல்லது தாய் ஆசிரியராக பணிபுரிந்தால் / பணிபுரிந்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்
8. ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் / இறந்து போன ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இப்படிப்புதவித் தொகை பெற தகுதியுள்ளவர்கள் ஆவார்கள்.
9. ஆசிரியரல்லாத பணியாளர்கள் விண்ணப்பிக்கக் கூடாது.
10. விண்ணப்பங்கள் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 24.01.2025.
11. ஏற்கனவே படிப்புதவித் தொகை ரூ.50,000 பெற்ற மாணவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கக் கூடாது.
12. சார்ந்த மாணவ/மாணவியரின் வங்கி கணக்கு எண் சார்ந்த விவரம் படிவத்தில் பூர்த்தி செய்தும், வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் பெற்று இணைக்கவேண்டும்.

Padasalai.Net

இணைப்பு – அரசாணை நகல் / படிவம்

இயக்குநர்.

3/1/25

Padasalai.Net